# சார்பு நீதிமன்றம், அவிநாசி

## OS – 209/2018

நாள் 25.02.2025

PW2 – T.சசிகுமார்

த/பெ – R.தங்கவேல்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 25th day of February 2025.)**

**குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது தண்டுக்காரன்பாளையத்தில் வசித்து வருகிறேன். எனது அப்பா பெயர் தங்கவேல். நானும், எனது அப்பாவும் சேவூர், தண்டுக்காரன்பாளையத்தில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது அப்பா உயிரோடு தான் இருந்து வருகிறார். எனது தாயார் பெயர் ருக்குமணி. அவர் இந்த வழக்கில் 1–ம் வாதி ஆவார். எனது அம்மாவின் அப்பா சென்னிமலை கவுண்டரை எனது அம்மாவும், எனது சித்தி சுந்தராம்பாள் 2–ம் வாதியும் சேர்ந்து தான் பார்த்து பராமரித்து வருகிறார்கள். நான் 10–ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியும். எனக்கு இந்த 3 வழக்குகளில் கண்டுள்ள சங்கதிகளை பற்றி எனக்குத் தெரியும். சென்னிமலை கவுண்டர் அடிக்கடி அவிநாசி கூட்டுறவு சொசைட்டியில் கடன் வாங்குவார் என்றால் சரிதான், ஒரு முறை தான் கடன் வாங்கியுள்ளார். அந்த சமயம், அவருடைய மகன் நடராஜீம் உடன் இருந்துள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு கடன் வாங்கிய காலத்தில் நான் தண்டுக்காரம்பாளையத்தில் தான் இருந்தேன். அந்த சமயத்தில் நானும், எனது அம்மா 1–வாதியும் எனது தாத்தா சென்னிமலை கவுண்டரை அடிக்கடி வந்து பார்த்து செல்வோம். அந்த சமயத்தில் எனது தாத்தா சென்னிமலை கவுண்டரும் அவரது மகனான எனது தாய்மாமா நடராஜ் ஆகிய இருவரும் சொத்தை விற்க முயற்சி செய்து வந்தார்கள் என்றால்

சரிதான். அவ்வாறு அவர்கள் சொத்தை விற்க முயற்சி செய்த போதெல்லாம் நாங்கள் அதை தடுத்து கொண்டே வந்தோம் என்றால் எனது தாயார் பெயரில் தான செட்டில்மெண்ட் ஏற்பட்ட பிறகு தடுத்து காப்பாற்றி வந்தோம். அந்த வகையில் 1–ம் பிரதிவாதி லோகநாதன் சொத்தை கிரையம் பெறும் போதும் நாங்கள் ஆட்சேபணை செய்தோம் என்றால் சரிதான்.

2. தாவா சொத்திற்கு ஒட்டினார் போல் அந்த லோகநாதனுக்கு பாத்தியப்பட்ட சொத்தும் இருந்து வந்தது என்றால் சரிதான். அந்த லோகநாதன் சொத்தை வாங்க முயற்சிபதை எவ்வாறு தெரிந்து கொண்டோம் என்றால், தரகர்கள் மூலம் சொத்தை அவர்கள் பார்வையிட்ட வகையில் தெரிந்து கொண்டோம். எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா 5–ல் 1,2 பிரதிவாதிகள் சொத்தை விற்க ஒப்புக்கொண்டு செட்டில்மெண்ட் பத்திர தேதிக்கு முன்பே 1,2 பிரதிவாதிகள் துணையுடன் 3–ம் பிரதிவாதி பெயரில் ஒரு கிரைய ஒப்பந்த பத்திரம் தயார் செய்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு கிரைய ஒப்பந்த பத்திரம் போடக்கூடாது என்று எனது தாத்தாவிடமும், எனது தாய்மாமாவிடமும் போய் சொன்னோம். எனது தாயாரும், எனது சித்தியும் தாக்கல் செய்துள்ள வழக்கிலேயே எனது தாத்தாவும், எனது தாய்மாமாவும் சேர்ந்து அக்ரிமெண்ட் போட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு அக்ரிமெண்ட் போடக்கூடாது என்று நாங்கள் சொன்னதற்கு எனது தாத்தா என்ன சொன்னார் என்றால், அக்ரிமெண்ட் போட மாட்டோம் என்று சொன்னார். 1,2 பிரதிவாதிகள் 3,4 பிரதிவாதிகள் பெயரில் எழுதிக்கொடுத்துள்ள கிரைய ஒப்பந்த பத்திரத்தில் உள்ள கையொப்பங்கள் எனது தாத்தா 1–ம் பிரதிவாதி சென்னிமலை கவுண்டரின் கையொப்பங்கள் என்றால் சரிதான். அந்த

கிரைய ஒப்பந்த பத்திரத்தின் பேரில் 3,4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த அ.வ.எண்.344/2008, 266/2008 என்ற வழக்குகளில் பிறந்த தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லாது என்று பரிகாரம் எதுவும் இந்த வழக்குகளில் கேட்கவில்லை என்றால் சரிதான்.

3. 3,4 பிரதிவாதிகளிடம் இருந்து தான் லோகநாதன் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். எனது தாத்தாவின் சம்மத்தின் பேரில் தான் நீதிமன்றம் மூலம் கிரையமும் 3,4 பிரதிவாதிகள் பெயரில் ஏற்பட்டுள்ளது என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.மேற்படி வீதம் எனது தாத்தா 3,4 பிரதிவாதிகளுக்கு கிரைய ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தது, அந்த ஒப்பந்தத்தின் பேரில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நீதிமன்றம் மூலம் கிரையம் ஏற்பட்ட விபரம் எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தற்போது நடந்து வரும் 3 வழக்குகளின் விபரங்கள் அனைத்தும் நான் படித்து பார்த்து தெரிந்து கொண்டேன். என்னிடம் காட்டப்படும் எனது தாயார் பெயரில் உள்ள வா.சா.ஆ.1 தான செட்டில்மெண்ட் பத்திரமானது எனது தாத்தாவின் சொத்தை காப்பாற்றுவதற்காக வேண்டி தான் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். நாங்கள் லோகநாதன் என்பவர் மீது தாக்கல் செய்த வழக்கான அ.வ.எண்.262/2016 தாவா பிராதுவில் பாரா –10 ல், 8,9,10 வரிகளில் அவிநாசி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்குகள் விசாரணை முடிந்து தீர்ப்பு பிறப்பித்து நல்லிசண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி இருவருக்கும் வழக்கு சொத்தில் உரிமை இருக்கும் பட்சத்திலேயே வழக்கு சொத்திற்குள் நுழைய லோகநாதனுக்கு சட்டப்படி தகுதி உண்டு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தா 1–ம் பிரதிவாதி, எனது தாய்மாமா 2–ம் பிரதிவாதியும் அசல் வழக்கு எண்.209/2018 வழக்கின் வாதியான 3–ம்

பிரதிவாதியான நல்லிசண்முகசுந்தரத்திற்கு சொத்தை விற்க ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்று எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

4. மேற்படி நல்லிசண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர் பெயரில் எழுதி கொடுக்கப்பட்ட விற்கிரைய ஒப்பந்த பத்திரங்களை நீதிமன்ற நகலை எடுத்து இந்த வழக்குகளில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்த பத்திரங்களை நானும், எனது தாயாரும், எனது சித்தியும் நேரில் கூட பார்த்ததில்லை என்றால் சரிதான். அதனால் மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரங்களை பொறுத்து இந்த வழக்குகளில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரங்களை எழுதி கொடுப்பதற்கு முன்பாக எனது தாத்தா சென்னிமலை கவுண்டரின் சுவாதீன அனுபவத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். அதனால் தான் எனது தாத்தா தாவா சொத்தை பொறுத்து நல்லிசண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர் பெயரில் கிரைய ஒப்பந்த பத்திரங்களை ஏற்படுத்திக்கொண்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தாத்தா உண்மையிலேயே தாவா சொத்தை பொறுத்து நல்லிசண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர்களுக்கு கிரைய ஒப்பந்த பத்திரங்களை எழுதி கொடுத்ததினால் தான் மேற்படி அ.வ.எண்.344/2008, 266/2008 என்ற வழக்குளை எனது தாத்தா தீர்ப்பிற்காக விட்டு விட்டார் என்றால் சரிதான். அ.வ.எண்.262/2016 வழக்கில் எனது தாத்தா சென்னிமலை கவுண்டர் நல்லிசண்முகசுந்தரம், விஸ்வலிங்கசாமி ஆகியோர்கள் பெயரில் எழுதிக் கொடுத்த கிரைய ஒப்பந்த பத்திரங்களை வழக்கு மூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு பட்டா, சிட்டா

லோகநாதன் பெயரில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். எனது தாயார் தாக்கல்செய்த அ.வ.எண்.262/2016 வழக்கின் தாவா பிராதுவில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை தான். அந்த தாவா பிராதுவில் செட்டில்மெண்ட் ஆவணத்தை பொறுத்து சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் சரியானவை தான். இந்த வழக்கில் லோகநாதன் 1–ம் பிரதிவாதி என்றால் சரிதான்.

5. தாவா பிராதுவில் பாரா –1 ல் 8,9,10 வரிகளில் சென்னிமலை கவுண்டர் கடந்த 03.04.2006–ம் தேதியில் வாதிகளுக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் வழக்கிடை சொத்தினை செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக எழுதி கொடுத்து விட்டார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாத்தாவிற்கு எனது அப்பா தங்கவேல் தான் மூத்த மருமகன் என்றால் சரிதான். எனது அப்பா தங்கவேலுக்கு தண்டுக்காரன்பாளையத்தில் உள்ள நபர்கள் அனைவரும் நன்கு பழக்கம் என்றால் சரிதான். அந்த சொத்து பிரச்சனை சம்பந்தமாக எனது அப்பாவிற்கும், எனது தாய்மாமன் நடராஜீவிற்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரிதான். எனது தாத்தாவும், எனது தாய்மாமாவும் சொத்துக்களை விற்க முயற்சி செய்து வந்த விபரம் எனது அப்பாவிற்கு தெரியும் என்றால், அவருக்கு தெரியாது. எனது தாயார் பெயரில் ஏற்பட்டுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை ராமசாமி என்பவர் தான் தயார் செய்துள்ளார். அவர் தண்டுக்காரன்பாளையத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். தாவா சொத்தை அபகரிக்க வேண்டி தான் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணமானது வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். அந்த ரத்து பத்திரத்தில் எனது தாத்தாவின் புகைப்படம்

உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் எனது தாத்தா சென்னிமலை கவுண்டரின் புகைப்படம் எதுவும் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் மதிப்பு கூடி விட்டதால் சொத்தை அபகரிக்க வேண்டி நாங்கள் வா.சா.ஆ.1 செட்டில்மெண்ட் ஆவணத்தை மோசடியாக தயார் செய்து கொண்டோம் என்றால் சரியல்ல. அதனால் நாங்கள் தாக்கல் செய்துள்ள 3 வழக்குளையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR Digitally signed by C SENTHIL KUMAR Date: 2025.02.25 13:10:58 +0530

**Subordinate Judge,**
**Avinashi.**